உ

ஆரூரா ! தியாகேசா !!

# திருவாரூர்

## அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்

( சர்வதோஷ பரிகாரத்தலம் )



# ஆழித்தேரோட்ட விழா அழைப்பிதழ்

நாள் : 27.05.2018 ஞாயிற்றுகிழமை காலை 6.00 மணிக்கு மேல் 7.00 க்குள்



## ஆரூர் அமர்ந்த அரசே போற்றி!

போழொத்த வெண்மதியஞ்சூடிப் பொலிந்திலங்கு
வேழத்துரி போர்த்தான வெள்வளையாள் தான் வெருப
ஊழித்தீயன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான் கண்டதாரூரே !

- திருநாவுக்கரசு

தேராரும் நெடுவீதித் திருவாரூர் வாழ்வார்க்கு
ஆராத காதலின்நம் ஆரூரான் நாமமழைக்க
வாராநின்றா(ன்) அவனை மகிழ்ந்தெதிர் கொள்வீரென்று
நீராரும் சடைமுடி மேல்நிலை வனிந்தார் அருள்செய்தார்

- சேக்கிழார்

மன்னுபுகழ் மரபீர்! மனங்கனிந்த வணக்கம்,

இவ்வுலகத்து உயிர்கள் மேன்மையடைந்து உய்வதன் பொருட்டு இறைவன் வீற்றிருந்து அருள் வழங்கும் தலங்களுள் தலையானது பாடல் பெற்ற தலங்களுள் மிக அதிகமான பாடல்களைப் பெற்றது, சைவ சமயத்திற்கே தலைமைப் பீடமாய் விளங்குவது,பிறந்தாலும், பெயர் சொன்னாலும் முக்தி யளிப்பது, பஞ்சபூத தலங்களுள் பூமிக்குரிய தலமாக விளங்குவது நளனும், சனிஸ்வர பகவானும் வழிப்பட்ட ஒரே தலமாகவும்,சர்வதோஷ பரிகாரத்தலமாகவும், மூலாதாரதலமாகவும் விளங்குவது, சப்த விடங்கர் தலங்களுள் முதன்மையானது சக்தி பீடங்களுள் ஞானசக்தி பீடமானது திருவாரூர் திருத்தலமாகும். பன்னிரு திருமுறைகளிலும் பாடப்பெற்ற பெரும் சிறப்பினை உடையது திருவாரூர். சைவ சமய மரபில் பெரியகோயில் என்றால் அது திருவாரூரையே குறிக்கும்.

இத்திருக்கோயிலின் தேரினை ஆழித்தேர் என நாவுக்கரசரும், தேராரும் நெடுவீதி திருவாரூர் என சேக்கிழாரும் பாடுகின்றனர். திருவாரூரின் தேரோட்டத் திருவிழாவினை திருஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், இவ்வூரில் வந்து தங்கி முன்னின்று அன்று போல் இன்றும் நடத்துவதாகவும், அருள்மிகு தியாகராஜ சுவாமி தனது பரிக்கால பரிவாரங்களுடன் எழுந்தருளி பவனி வரும் ஆழித்தேர் திருவிழாவை காண இந்திரன் முதலான விண்ணவரும் வருவதாகவும் ஐதீகம்.





# அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்

( சர்வதோஷ பரிகாரத்தலம் )

## திருவாரூர்.

# ஆழித்தேரோட்ட விழா

நிகழும் சுபஸ்ரீ மங்களகரமான ஸ்ரீவிளம்பி வருடம் வைகாசி மாதம் 13-ம் நாள் [ **27.05.2018 ஞாயிற்றுக்கிழமை** ] திரியோதசி திதியும், சுவாதி நட்சத்திரம் சித்யயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்கு மேல் 7.00 மணிக்குள் மிதுன லக்னத்தில் **ஆழித்தேர் வடம் பிடிக்கப்பெறும்.**

---

**தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்** அவர்கள்
( இராஜன்கட்டளை ) தருமபுரம்.

**திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சத்யஞானமகாதேவதேசிய பரமாச்சார்ய சுவாமிகள்** அவர்கள்,
திருப்புகலூர். ( அபிஷேகக்கட்டளை மற்றும் அன்னதானக்கட்டளை )

**திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்** அவர்கள்,
திருவாவடுதுறை.

**திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமி தம்பிரான் சுவாமிகள்** அவர்கள்,
திருப்பனந்தாள்

---

மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அறநிலையத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை தந்து சிறப்பிக்க உள்ளனர். பக்தர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் உறவும், நட்பும் சூழ வந்து ஆரூரான் ஆரூரில் அம்மானுக்காளாகி இறையருளும், மேன்மையும் பெற்றுச் சிறக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்:

**எஸ்.எஸ்.பாலசுப்ரமணியன்,** பி.ஏ., பி.எல்.,
தக்கார்/ உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, நாகப்பட்டினம்.

**ராம்.வி.தியாகராஜன்** பி.டெக்.,
பரம்பரை அறங்காவலர்,
உள்துறைக்கட்டளை

**இ.ஆர்.இராஜேந்திரன்,**
செயல் அலுவலர்
அருள்மிகு தியாகராஜசுவாமி, திருக்கோயில்.

மற்றும் **திருக்கோயில் பணியாளர்கள்.**

<u>நிகழ்ச்சி நிரல்:</u>

நிகழும் ஸ்ரீ விளம்பி வருடம் வைகாசி மாதம் 13- ம் தேதி

(27.05.2018) ஞாயிற்றுகிழமை

அதிகாலை 4.00 மணிக்கு மேல் 5.00 மணிக்குள்...

அருள்மிகு **விநாயகர்** மற்றும் அருள்மிகு **சுப்ரமணியர்**

**தேர் வடம் பிடிக்கப்பெறும்.**

tnhrce.org

பக்தர்கள் நன்கொடைகள், காணிக்கைள் மற்றும் அபிஷேகக் கட்டணங்களை பணவிடை மற்றும் வங்கி வரைவோலையாக அல்லது இந்தியன் வங்கி திருவாரூர் கிளை சேமிப்பு கணக்கு எண் : 872086429 ல் தொகை செலுத்தி விபரம் தெரிவித்து ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

**ALL DONATIONS OFFERINGES, ABHISHEGA FEES SHOULD BE SENT TO :**

**THE EXECUTIVE OFFICER**

**ARULMIGU THIYAGARAJASWAMY TEMPLE, THIRUVARUR - 610001**

**TAMILNADU SOUTH INDIA PH : 04366- 242343.**

**திருக்கோயில் தொடர்பு முகவரி :**


**செயல் அலுவலர்,**

**அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்,**

**திருவாரூர் - 610 001.**

(சர்வதோஷ பரிகாரத்தலம்)

Ph : 04366 - 242343, web: www.thiyagarajaswamytemple.org.

e-mail : thiyagarajaswamytemple@gmail.com.


**சுபம்.**